Beginner Course - இரட்சிப்பு

3

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

YESUDAS SOLOMON

பொருளடக்கம்

நாம் இரட்சிக்கப்படுவதினால் நமக்கு கிடைக்கும் நன்மைகள் என்னென்ன?

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

1. பாவங்கள் மன்னிக்கப்படும்

- கொலோ 1:14 - இயேசுவின் இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.
- அப் 10:43 - இயேசுவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் பாவமன்னிப்பைப் பெறுவான்
- ரோமர் 6:18 - பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டீர்கள்

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

2. மரண பயம் நீங்கும்

- எபி 2:14,15 - ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

3. தேவனுடைய பிள்ளைகளாகிறோம்

- யோவா 1:12,13 இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் **தேவனுடைய பிள்ளைகளாகும்படி**, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.
- ரோமர் 8:15 - அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், **அப்பா பிதாவே**, என்று கூப்பிடப்பண்ணுகிற **புத்திரசுவிகாரத்தின் ஆவியைப்** பெற்றீர்கள்.
- கலா 3:26 - நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் **தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.**

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

4. புது சிருஷ்டி ஆகிறோம்

- 2 கொரி 5:17 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் **புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்**; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.
- எபே 4:24 மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் **சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத்** தரித்துக்கொள்ளுங்கள்.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

5. நீதிமானாக்கப்படுகிறோம், பரிசுத்தமாக்கப்படுகிறோம்

- *1 கொரி 6:11* - கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், **பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்**, **நீதிமான்களாக்கப்பட்டீர்கள்**.
- ரோமர் *5:1,9* - நாம் விசுவாசத்தினாலே **நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்**
- பிலி *3:9* - கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான **நீதியை உடையவனாயிருக்கிறோம்**

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

6. தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம், இனி தேவனுக்கு பகைஞர்/விரோதிகள் அல்ல

- ரோமர் 5:1 - நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் **சமாதானம்** பெற்றிருக்கிறோம்.
- கொலோ 1:20 - இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே **சமாதானத்தை** உண்டாக்கினார்

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

7. நமக்கு சமாதானம் கிடைக்கிறது

- யோவா 14:27 - **சமாதானத்தை** உங்களுக்கு வைத்துப்போகிறேன், **என்னுடைய சமாதானத்தையே** உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் **இருதயம் கலங்காமலும் பயப்படாமலும்** இருப்பதாக.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

8. ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கிறது
    - எபே 1:3 - நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே **ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும்** நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

9. இயேசு கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார்

- கலா 2:20 - கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, **கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்**; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.
- ரோம 8:10 - மேலும் **கிறிஸ்து உங்களிலிருந்தால்** சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

10. இயேசு கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்கிறார்

- *ரோம 8:34* - ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; **நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.**
- *1 யோவான் 2:1* - என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரரராயிருக்கிற **இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.**

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

11. சாத்தானின் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலை அடைகிறோம்

- கொலோ 1:13 - **இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி,** தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

12. நித்திய ஜீவன் கிடைக்கிறது - பரலோகம் / மோட்சம் போகிற பாக்கியம் கிடைக்கிறது

- ரோம 6:23 - பாவத்தின் சம்பளம் நரகம் என்கிற **நித்திய மரணம்**
- எசே18:20 - பாவம் செய்கிற ஆத்துமா சாகும்
- 2 தெச 1:7-10; ரோம 8:1 - இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு **நித்திய அழிவாகிய தண்டனை கிடையாது**
- யோவா 3:18 - இயேசுவை விசுவாசிக்கிறவன் **ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்;** விசுவாசியாதவனோ, ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

இரட்சிப்பினால் கிடைக்கும் நன்மைகள்

12. நித்திய ஜீவன் கிடைக்கிறது - பரலோகம் / மோட்சம் போகிற பாக்கியம் கிடைக்கிறது

- யோவா 3:16 - தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
- ரோமர் 6:23 - தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.
- பிலி 3:20 - நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

முடிவுரை

- இரட்சிக்கப்படுவதினால் அல்லது இயேசுவை இரட்சகராய் ஏற்றுக்கொள்வதினால் கிடைக்கும் நன்மைகள் ஏராளமானது, வேதத்தை வாசிக்க வாசிக்க நீங்களே அறிந்துக்கொள்ளலாம்
- இந்த வீடியோ மூலமா கேட்டவைகள் உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நெனைக்கிறேன்.
- இரட்சிப்பை குறித்து மேலும் அறிந்துக்கொள்ள எங்களுடைய மற்ற வீடியோக்களையும் பாருங்கள்.
- ஏதாவது கேள்விகள் இருந்தா *WhatsApp* அல்லது *Email* மூலமாக தொடர்புக்கொள்ளுங்கள்.
- இரட்சகராகிய இயேசு கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

Thank You

BIBLE MINUTES

To know more, please watch other related videos from our YouTube channel or Facebook page and feel free to contact us for any further questions

By Phone / WhatsApp

+91 90190 49070
+91 76765 05599

Email

wordofgod@wordofgod.in

Social

YouTube: Bible Minutes
Facebook: Bible Minutes